# *ஒப்பாய்வு நோக்கில் இஸ்லாமிய – சைவசித்தாந்த இறைக்கொள்கை*

**Mr. P.Chandrasegaram**
Department of Hindu Civilization, University of Jaffna, Sri Lanka
(chandrasegaram3@gmail.com)

**ஆய்வுச் சுருக்கம்**

*இன்றைய காலத்தில் மக்கள் பல்வேறுபட்ட இன, சமயச் சூழலில்வாழவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இதனால்கல்விசார் துறையில் சமயங்களுக்கிடையே நிகழ்த்தப்படுகின்ற ஒப்பாய்வுகள் மக்களிடையே ஒற்றுமையையும் புரிந்துணர்வையும் ஏற்படுத்தும் என்ற எதிர்பார்ப்பு இருந்து வருகின்றது. இலங்கையில் இஸ்லாமியசமயத்தையும், சித்தாந்த சைவத்தையும் பின்பற்றும் மக்கள் ஒருபிரதேசத்தில் வாழவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளமையால் இச்சமயங்களுக்கிடையில் நிகழ்த்தப்படும் ஒப்பாய்வு முக்கியத்துவமுடையதாகின்றது. மத்திய கிழக்கில் தோன்றிய இஸ்லாம்,இறைவன் ஒருவனே என்ற கொள்கையோடு "அல்லாஹ்ஸி இற்கு யாரையும் இணை வைப்பதை அனுமதிக்காத அதேவேளை இறைவன் உருவமற்றவர் எனவும் தெரிவிக்கின்றது. தென்னிந்தியாவில் தோன்றிய சைவசித்தாந்தம், முடிந்த முடிபு என்ற கருத்துடன் மெய்ப்பொருட்கொள்கையை உருவாக்கி, இறைவன் ஒருவனே எனத் தெரிவிக்கின்றது. இங்கு இறைவனுக்கு உருவம் இருப்பதாகக் கருதப்படுகின்றது. இவ்வாறு சில பிரதான விடயங்களில் ஒத்தும் வேறுபட்டும் செல்கின்ற இரு சமயங்களுக்கிடையிலான ஆராய்ச்சி மூலம் இரு சமயத்தவரிடையேயும் புரிந்துணர்வு மற்றும் நல்லிணக்கம் ஏற்படும் என நம்பலாம்.*

***திறவுச் சொற்கள்:*** *இஸ்லாம், சைவசித்தாந்தம், இறைவன், அல்லாஹ், திருக்குர்ஆன்*

**ஆய்வுப்பின்னணி**

சமகால சமயம் சார்ந்த கற்கைநெறித்துறையில் சமயங்கள் பற்றிய ஒப்பாய்வு (Comparative Religion) ஒரு பிரிவாகவே உள்ளது. நவீன தொழில்நுட்ப வளர்ச்சியினால் நாடுகளின் எல்லைகள் தகர்ந்து உலகம் ஒருமை நிலை நோக்கி நகர்கின்றது. மக்கள் முன்னர் போல் இல்லாமல் பல சமயச் சூழ்நிலையில் வாழ்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் கல்விசார் துறையில் சமயங்களுக்கிடையே நிகழ்த்தப்படுகின்ற ஒப்பாய்வுகள் மக்களிடையே நல்லிணக்கத்தையும், சகிப்புத்தன்மையையும் புரிந்துணர்வையும் மேம்படுத்தும் என நம்பலாம். மத்திய கிழக்கில் பிறப்பிடமான யூதம், கிறிஸ்தவம், இஸ்லாம் முதலிய சமயங்கள் பற்றிய ஒப்பாய்வுகள் ஐரோப்பாவில் முக்கியம் பெற்றுள்ளன. கீழைத்தேயத்திலும், இந்தியாவில் தோன்றிய இந்து, பௌத்த, சீக்கிய சமயங்கள் பற்றிய ஒப்பாய்வுகள் இடம்பெறுகின்ற அதேவேளை கிறிஸ்தவ, இஸ்லாமிய சமயங்களுக்கிடையிலும் ஒப்பாய்வுகள் இடம்பெறுகின்றன.

இஸ்லாமிய சமயம் மனிதனை மையப்பொருளாகக் கொண்டு, மனிதனுக்கு நேர்வழி காட்டும், ஒரு வாழ்வியல் ரீதியான அனைத்துலக சமயமாகும். கி.பி ஏழாம் நூற்றாண்டில் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு இறக்கி அருளப்பட்ட வேதமான அல்குர்ஆனின் போதனைகள் வழி, இறை தன்மைகள் வணக்கத்திற்குரியவையாகும் தகுதிக்கான தன்மைசார் சிறப்புக்கள் அனைத்தும் 'அல்லாஹ்' ஒருவனுக்கே உரியதாகும். இந்தப் பெயரைக் கொண்டு வேறு எவரையும் அழைக்கக்கூடாது. இத்தகைய பெயரைக்கொண்டு அழைக்க வேறு யாரும் தகுதியுடையவர்கள் **அல்லர்**. எனவே 'அல்லாஹ்' இற்கு இணை வைப்பதை இஸ்லாம் அனுமதிப்பதில்லை. உருவ வழிபாட்டையும் ஏற்றுக்கொள்வதில்லை.

இந்திய மெய்யியலில் தோன்றிய தென்னாட்டில் சிறப்புரிமையுடைய சைவசித்தாந்தம், தமிழர் வாழும் பிரதேசம் எங்கும் நிலைபெற்றுள்ளது. சமய தத்துவங்களின் முடிவுகளை எல்லாம் ஆராய்ந்து, அவற்றின் மேலான முடிவாக மெய்ப்பொருட் கொள்கையை உருவாக்கிய திறத்தினை, இந்நெறி சுட்டுகின்றது. சைவசித்தாந்தம் உலகப் பொருள்கள் எல்லாவற்றையும் பதி, பசு, பாசம் என்னும் முப்பொருள்களில் உள்ளடக்கி ஆராய்கின்றது. இவற்றுள் பதி என்பது தலைவன், இறைவன், கடவுள் என்பதைக் குறிக்கும்.உயிர்கள் யாவற்றிற்கும் அவனே தலைவன். பசுவாகிய உயிர்கள் எல்லாம் அவனுக்கு அடிமைப்பொருட்கள் ஏனைய உலகப்பொருட்கள் அவனுக்கு உடைமைப்பொருட்கள் ஆகும். இறைவன் ஏகனாகவும், தேவர்களுக்கெல்லாம் தலைவனாகவும், பிறப்பு - இறப்பு இல்லாதவனாகவும், தாய், தந்தை, மனைவி இல்லாதவனாகவும் கூறப்படுகின்றான். இவ்வாறு சைவசித்தாந்தம் இறைவன் பற்றிக் கூறும்

கருத்துக்கள், இஸ்லாம் கூறும் 'அல்லாஹ்' என்ற ஏகப்பரம்பொருள் கொள்கையுடன் ஒத்துச்செல்கின்றது. எனினும், சைவசித்தாந்தம் அத்தகைய இறைவனுக்கு உருவம் வகுத்துக்காட்டுவதால் அது இஸ்லாத்திலிருந்து வேறுபட்டும் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

இஸ்லாம் மற்றைய உலக சமயங்களுடன் ஒப்பிடுகின்றபோது, பல தனித்துவமான அம்சங்களைக் கொண்டுள்ளது. இஸ்லாத்தை உலகிற்குத் தந்த முஹம்மத், விஷ்ணுவின் பத்தாவது அவதாரமாக உள்ள 'கல்கி' அவதாரத்துடன் இணைத்து ஆராய்ச்சிகள் வெளிவந்துள்ளன. இஸ்லாத்தின் ஏகப்பரம்பொருள் கொள்கையானது இந்துசமயத்தை உலகறிய வைத்த சுவாமி விவேகானந்தர், காஞ்சி சந்திரசேகரசரஸ்வதி சுவாமிகள் போன்ற பலரையும் ஈர்த்துள்ளது. திருக்குர்ஆன் 7 ஆம் நூற்றாண்டில் வெளிப்படுத்தப்பட்டது என்றாலும், அதனுடைய சிந்தனைகள் 21 ஆம் நூற்றாண்டின் இஸ்லாமிய சமுதாயத்தை கட்டுக்கோப்பாக வைத்திருப்பதற்கு உதவுகின்றன. மேலும், பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கையில் சைவ - கிறிஸ்தவ கண்டனங்கள் நடைபெற்ற காலத்தில் சைவர்களும், இஸ்லாமியர்களும் சமய நல்லிணக்கத்துடன் இருந்துள்ளனர். பின்னர் அரசியல் காரணிகளால் நிகழ்ந்த பிரச்சினைகளை மதக்காரணிகளைக் கொண்டு விளக்குதல் பொருத்தமற்றது. சமகாலத்தில் ஏற்பட்டுள்ள சமாதானச் சூழலில் சைவத்தமிழ்மக்கள், முஸ்லீம் மக்களுடன் பழைய நல்லுறவைக் கட்டியெழுப்புவதற்கும், அயற்சூழலில் வாழும் இரு சமயத்தவர்களும் தங்களது சமயபோதனைகளுக்கு மற்றைய சமயங்களின் கருத்துக்களை உள்வாங்கிக் கொள்வதற்கும், தங்களது சமயம் பற்றிய அயலவர்களின் புரிதலில் உள்ள சாதக, பாதகங்களை சீர்தூக்கி ஆராய்வதற்கும் இவ்வாய்வு உதவும். இவ்வடிப்படையில் இஸ்லாத்தின் புனிதவேதமும், எல்லாம் வல்ல இறைவனான 'அல்லாஹ்' இனால் இக்கலியுகத்தில் இறுதியாக இறக்கப்பட்டதுமான திருக்குர்ஆன் போதிக்கும் ஏகஇறைவனின் முக்கியத்துவம் மற்றும் விளக்கங்கள், சைவசித்தாந்த மெய்யியலில் எவ்வளவு தூரம் நெருங்கி வருகின்றது, விலகிச் செல்கின்றது, அதற்குரிய காரணிகள் என்ன என்பதுபற்றி இவ்வாய்வில் ஆராயப்படுகின்றது. இதன்வழி இரு சமயங்களுக்குமிடையிலான நல்லிணக்கம், புரிந்துணர்வு, சகிப்புத்தன்மை என்பன ஏற்படுவதற்கு ஏதுவாகும்.

**ஆய்வு முறையியலும், மூலங்களும்**

இவ்வாய்வில் விவரண முறை, ஒப்பியல் முறை, பகுப்பாய்வு முறை முதலிய ஆய்வு முறைகள் பயன்படுத்தப்படுகின்றன. இஸ்லாமிய-சைவசித்தாந்த இறைக்கொள்கை முதலில் விவரண முறையில் விளக்கப்பட்டு, பின்னர் ஒப்பாய்வு முறையிலும், பகுப்பாய்வு முறையிலும் விளக்கப்படுகின்றன.

இங்கு முதல் நிலைத் தரவாக, இஸ்லாமிய நம்பிக்கை நிறுவனம் (IFT) வெளியிட்ட திருக்குர்ஆனின் தமிழ்மொழி மூலமான மொழிபெயர்ப்பும்,சிவஞானபோதம், சிவஞான சித்தியார், திருவாசகம் என்பன பயன்படுத்தப்படுவதுடன், இரண்டாம் நிலைத் தரவாக இஸ்லாம் சம்பந்தமாக வெளிவந்துள்ள ஆய்வு நூல்கள் மற்றும் சைவசித்தாந்தம் சார்ந்த வேதம், ஆகமம், பன்னிரு திருமுறைகள், சாஸ்திர நூல்கள் என்பன பயன்படுத்தப்படுகின்றன.

**அறிமுகம்**

இஸ்லாம் என்ற அரபுச்சொல்லிற்கு சரணடைதல்,கீழ்ப்படிதல், கட்டளை நிறைவேற்றுதல்,இணங்கி நடத்தல் என்று பொருளாகும். 'அல்லாஹ்' இற்கு முற்றிலும் கீழ்ப்படிந்து அவனுடைய ஏவல்களை நிறைவேற்ற வேண்டி இருப்பதனால்இதற்கு 'இஸ்லாம்' என்று பெயரிடப்பட்டுள்ளது.[1]இஸ்லாம் என்ற சொல்லிற்கு சாந்தி என்ற பொருளும் உண்டு. இறைவனுக்கு ஒருவன் கீழ்ப்படிந்து நடப்பதனால் தான் உண்மையான சாந்தியை ஒருவன் பெற்றுக் கொள்ளமுடியும் என்பதை இது சுட்டிக்காட்டுகின்றது. இஸ்லாத்தை முழுமையாகப் பின்பற்றுபவர் முஸ்லிம் எனப்படுவர். அல்லாஹ்வுக்கு அடிபணிவதும் அல்லாஹ்வுக்குக் கடமைப்பட்டிருப்பதும் மற்றொன்றில் தங்கியிருத்தலைக் கைவிடுவதும் இறைவனின் தன்னாதிக்கத்திற்கும் தன்னை அர்ப்பணிப்பதும் தனது எல்லா நடவடிக்கைகளையும் அல்லாஹ்வுக்காகச் செய்பவனே முஸ்லிம் என மௌதூதி என்ற அறிஞர் குறிப்பிடுகின்றார்.[2] சைவசித்தாந்தம் என்பதில் சைவம் என்பது சிவசம்பந்தமானது. 'சைவம் சிவனுடன் சம்பந்தமாகுதல்' என்பர் திருமூலர். (திருமந்திரம்:1497) ஆன்மா அல்லது உயிருக்கு சிவத்துடன் அநாதிதொட்டு வருகின்ற சம்பந்தத்தை விளக்குவது சைவம். இதனை மாணிக்கவாசகர் 'உருத்தெரியாக் காலத்தே உள்புகுந்து என் உ(ள்)ளம் மன்னிக் கருத்திருத்தி ஊன்புக்குக் கருணையினால் ஆண்டுகொண்ட, திருத்துருததி மேயானைத் தித்திக்கும் சிவபதத்தை'எனக் குறிப்பிடுகின்றார்.[3]ஆன்மா ஆணவமலத்தோடு கூடிச் சடப்பொருள்போல அநாதி கேவலத்தில் இருந்து,சுக்கிலமும் சுரோகிதமும் ஒன்று கலந்து ஒரு வடிவத்தைப் பெறுவதற்கு முன்னரே அவற்றினுள் இருக்கும் உயிரணுக்களுக்கு உள்ளே உட்புகுந்து உளம் மன்னி, கருவானது இடையே அழிந்துவிடாமல் அதனை வளருமாறு செய்தது,இறைவனது கருணையே என்பதாகும். இதனால் சிவபெருமானைப் பரம்பொருளாகக் கொண்டவர்கள் சைவர்கள் எனப்படுவர். ஆறுமுகநாவலர் இதனைப் பிறப்பும் இறப்பும் உடையவர்கள் பசுக்கள் (உயிர்கள்). பசுக்கள் எண்ணிக்கை அற்றவை. இவை தேவர்கள் முதலாகக் கிருமிகள் ஈறாக உள்ள சீவர்கள்.

பிறப்பும் இறப்பும் இல்லாதவர் பதி (இறைவன்) ஒருவரே. அந்தப் பதி சிவபெருமான. சிவபெருமானுக்குப் பசுக்கள் எல்லாம் என்றும் அடிமைகள். சிவபெருமான் அந்தப் பசுக்கள் தோறும் நிறைந்து நின்று அவர்களை எல்லாம் ஆளுந் தலைவர். ஆதலாற் சிவபெருமான் ஒருவரே பசுபதி. இந்த உண்மையை விசுவசித்துச் சிவபெருமானை வழிபடுகின்ற மார்க்கஞ் சைவ சமயம். பலரைப் பரம் என்று கொண்டு வணங்குகிற சமயம் சைவசமயமாகாது சிவபெருமானிலும் உயர்ந்தவர் உண்டு என்றாவது சிவபெருமானுக்குச் சமத்துவம் உடையவர் உண்டு என்றாவது கொள்வது சிவத்துரோகம் எனக் குறிப்பிட்டிருத்தல் காணலாம்.[4]

சித்தாந்தம் என்பது சித்தம் + அந்தம். இங்கு சித்தம் என்றால் முடிந்தது, அந்தம் என்றால் முடிவு. இவ்விரண்டு சொற்களும் இணைந்து நின்று முடிந்த முடிவான மெய்ப்பொருட்கொள்கை என்ற கருத்தினைத் தரும். இம்முடிப்பிற்கு மேல் ஒரு முடிவில்லை. இதுவே ஏனைய தத்துவவாதிகளின் முடிவுகளுக்கு மேம்பட்ட இறுதி முடிவு(End of ends or Conclusion of conclusion) தத்துவச்சிந்தனைகளின் முடிவிடம் (The last terminus of Philosophical thought) சித்தாந்தம் என்ற சொல் பொதுவாகச் சிந்தனையின் முடிவு என்ற பொருளில் ஏனைய எல்லாத் தத்துவங்களையும் சுட்டுமெனினும் காரண இடுகுறியாகச் சைவசித்தாந்தம் ஒன்றையே சிறப்பாகச் சுட்டுதல் வழக்கில் காணலாம். ஏனைய சமய தத்துவங்கள் கண்ட முடிபுகளுக்கெல்லாம் மேலான முடிந்த முடிபு என்ற பொருளில், சைவசித்தாந்தம் என்ற குறியீடு திகழ்கிறது. மாணிக்கவாசகப் பெருந்தகை “செம்பொருள் துணிவே”(திருவாசகம்:பிடித்தபத்து,01) என்று குறிப்பிடுதல் காணலாம்.

**பகுப்பாய்வு**

இஸ்லாம் சமயத்தில் உள்ள ஏக இறைக்கொள்கை, உருவமற்ற வழிபாடு என்பன எல்லாச் சமயநெறிகளும் பின்பற்றத்தக்க கருத்தியலாகும். சைவசித்தாந்தமும் அந்த ஏக இறைவனை உருவமற்ற நிலையில் அறிவால் வழிபடுவதற்கே வழிகாட்டுகின்றது. இஸ்லாம் ‘அல்லாஹ்’ எனக் குறித்துள்ள ஏக இறைவனைச் சைவசித்தாந்தம் ‘சிவம்’ எனக் குறிப்பிடுகின்றது. இறைவன் பற்றிய ஆய்வை ஒரு வரையறைக்கு மேல் ஆராயக் கூடாது என்ற கருத்து இரு சமயத்திலும் இருந்தாலும், வேதவாக்குக்கு அப்பால் இறைவனை அறிவாராய்ச்சியியல் ரீதியில் - அளவைமுறையில் சைவசித்தாந்தம் ஆராய்ந்துள்ளது. இறைவன் எல்லாவற்றையும் கடந்த நிலையிலும், எல்லாவற்றுடன் கலந்த நிலையிலும் உள்ள தன்மைகள், அவனை அடையத்தக்க முறையினையும் சைவசித்தாந்தம் விளக்கி உள்ளமை இங்கு சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது. இறைவனுக்கு இணைவைப்பதை, சைவசித்தாந்தம் இஸ்லாத்தைப் போல நிராகரித்தாலும் மக்கள் பின்பற்றும் நடைமுறையில் அது சாத்தியங்கள் அற்றதாக உள்ளது. இறைவன் உலகத்தைப் படைத்தல், பரிபாலித்தல் போன்ற விடயங்களில் இரண்டு சமயங்களும் ஒன்றுபட்டாலும், படைக்கும் முறை, பரிபாலனம் பற்றிய விளக்கங்களில் சிற்சில வேறுபாடுகள் உள்ளன. இவை பற்றிய ஆழமான ஆராய்ச்சிகள் சைவசித்தாந்த மரபில் உள்ளமை குறிப்பிடத்தக்கது.

திருக்குர்ஆன் வாசிப்புக்கூடாகப் பெறப்படுவது, கட்டுண்டு, நெறிகெட்டுப்போகும் இன்றைய மனித குலத்திற்கு, சிறந்த வழிகாட்டக்கூடியது அதுவன்றி வேறில்லை. சைவசமயத்தில் வேதங்களும், தர்மசாஸ்திரங்களும் கூறும் நெறிமுறைகளை, நாம் பல நூல்களின் வாயிலாக அறிகின்றோம். அவற்றுள் சில காலத்துக்கு ஒவ்வாதது என சைவர்களே(இந்துக்கள்) நிராகரிப்பார்கள். அந்த வகையில் பல நூல்கள் கூறும் மனித வாழ்வியல் நெறிமுறைகளை எல்லோருக்கும் விளங்கும் முறையில் கட்டளைகளாகத் தருகின்ற சிறப்பு‘திருக்குர்ஆன்’ இற்கே உரியதாகும். இதன்வழி, இஸ்லாம் என்பது இறைவனை முன்னிலைப்படுத்தும் வாழ்வியல் நெறி எனக் குறிப்பிடலாம்.

‘அல்லாஹ்’ இனால் அருளப்பட்ட இம்மார்க்கத்திற்கு இஸ்லாம் எனப் பெயரிட்டது மனிதர்கள் அல்ல. ‘இஸ்லாம்’என்பது ‘அல்லாஹ்’ இனால் அருளப்பட்ட சிறப்புப்பெயராகும். ‘இன்றைய தினம் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தைப் பரிபூரணமாக்கிவிட்டேன். மேலும், நான் உங்கள் மீது அருட்கொடையைப் பூர்த்தியாக்கிவிட்டேன். இன்னும் உங்களுக்காக நான் இஸ்லாம் மார்க்கத்தையே இசைவானதாகத் தேர்ந்தெடுத்துள்ளேன்’ என்பது இஸ்லாத்தின் தலையாய நூலாகிய திருக்குர்ஆன் போதனை.(5:3, 51:19) இஸ்லாத்தில் இறைவனுக்கும் மனிதனுக்குமான சம்பந்தம் என்பது‘அல்லாஹ்’ இற்குக் கீழ்ப்படிதல்,அவனுடைய கட்டளைகளை நிறைவேற்றுதல் என்பது போல,சித்தாந்தத்தில் இறைவனுக்கும் ஆன்மாவுக்குமான சம்பந்தம் ஆண்டான், அடிமைச் சம்பந்தமாகும். இதனை ‘என் தாயோடு என்னப்பன் ஏழேழ் பிறவியும்,அன்றே சிவனுக்கு எழுதிய ஆவணம்’எனத் திருமந்திரமும் (திருமந்திரம், பாடல்:1854)‘அற்புதப் பழ ஆவணங்காட்டி அடியனாய் என்னை ஆளது கொண்ட,நற்பதத்தை நள்ளாறனை அமுதை’ (7:68:6) என சுந்தரமூர்த்தி சுவாமிகள்அருளிய எழுதுமறையும்குறிப்பிடுதல் காணலாம்.

இஸ்லாத்தின் புனித நூலான குர்ஆன் மற்ற எந்த நூலுடனும் ஒப்பிடமுடியாத ஒரு தனிவகை நூல். அது இறைவனால் இறக்கியருளப்பட்ட வேதமாகவும், மனிதகுலத்திற்கு ஒரு வழிகாட்டியாகவும் விளங்குகின்றது. உலகம்

அனைத்திற்கும் உரிய தூதை அது தன்னுள் கொண்டுள்ளது. எல்லாக் காலங்களுக்கும் உரிய ஏற்றமிகு செய்தியாக இருக்கும் அதே வேளை முந்தைய வேதங்களின் இறுதிவடிவமாகவும் திகழ்கின்றது. இது உலகில் வாழும் மாந்தர் யாவருக்கும் வழிகாட்டும் வேதநூல். '(நபியே)சத்தியத்தை ஏந்தி வந்திருக்கும் இவ்வேதத்தை உம்மளவில் நாம் அனுப்பினோம். இது அல்கிதாபின் (வேதநூலின்) அறிவுரைகளில் தன் எதிரில் எவை எஞ்சி நிற்கின்றனவோ அவற்றை உறுதிப்படுத்தக்கூடியதாயும் இருக்கின்றது.' (5:48) 'இது அல்லாஹ்ஹின் வேதமாகும் இதில் யாதொரு சந்தேகமும் இல்லை' (2.2) முஹம்மதே இது ஒரு வேதமாகும் இதனை உம்மீது நாம் இறக்கியுள்ளோம் மக்களை அவர்களுடைய இறைவனின் உதவிகொண்டு இருளில் இருந்து வெளியேற்றி ஒளியின் பக்கம் நீர் கொண்டுவரவேண்டும் என்பதற்காக அருளுகின்றோம் (14:1-2) இதனை முகம்மது (ஸல்) அவர்களும் இந்நூலுக்கு ஆசிரியன் நானல்ல அல்லாஹுத் ஆலாதான் - நான் மக்களுக்கு ஓதக்காண்பிப்பவன் என்கின்றார்.

சைவசித்தாந்திற்கு இறைவனால் அருளிச்செய்யப்பட்ட வேதம், ஆகமம் என்ற இரண்டும் பிரதான நூல்களாக உள்ளன. வேதம் உலகத்தவர் எல்லோரும் பயன்பெறுமாறும், ஆகமம் ஆன்மவிடுதலையை விரும்பும் சத்திநிபாதர்க்கும் அருளிச்செய்யப்படதாகும். இதனை 'வேதநூல்,சைவநூல் என்று இரண்டே நூல்கள்: வேறு உரைக்கும் நூல் இவற்றின் விரிந்த நூல்கள் ஆதி நூல் அநாதி நூல் அமலன் தரு நூல் இரண்டும் ஆரணநூல் பொது, சைவம் அருஞ்சிறப்பு நூலாம், நீதியினால் உலகர்க்கும் சத்திநிபாதற்கும் நிகழ்த்தியதுநீண்மறையின் ஒளிபொருள் வேதாந்தத்தீதில் பொருள் கொண்டுரைக்கும் நூல் சைவம் பிற நூல் திகழ் பூர்வஞ் சிவாகமங்கள் சித்தாந்தமாகும்' (சிவஞான சித்தியார்:267) எனவும் 'உலகில் வேதநூல் ஒழுக்கம் என்பதும் நிலவு மெய்நெறி சிவநெறியது என்பதும்'(பெரியபுராணம்:820) எனவும் குறிப்பிடுகின்றன.

இஸ்லாத்தின் இறைக்கொள்கைக்கு காணப்பட்ட உலகம் அத்தாட்சியாக இருக்கின்றது. இறையை நிராகரிப்பவர்கள், பிரத்தியட்சமாக இருக்கின்ற அத்தாட்சிகளில் ஒன்றையும் கருத்தில் எடுப்பதில்லை. நம்பிக்கையில் உறுதியானோருக்கு பூமியில் பல அத்தாட்சிகள் இருக்கின்றன. வானங்கள், பூமிகள் ஆகியவற்றின் ஒழுங்கமைப்பிலும், இரவு-பகல் ஒன்றன்பின் ஒன்றாகவருவதிலும்,மழைநீர் வருவதிலும் இதனை உணரலாம்.[5] இவ்வாறான ஒழுங்கமைப்புக்கெல்லாம் காரணராக 'அல்லாஹ்' இருக்கின்றார். திருக்குர்ஆனின் அடிப்படையான மரபுச்சொல்'அல்லாஹ்' ஆகும். அரபு மொழியில் 'இலாஹ்' என்றால் கடவுள் என்று பொருள். இந்தச் சொல்லுடன் 'அல்' சேர்த்து அல் - இலாஹ் என்றால்,'அந்த இறைவன்' என்று பொருள். ஆங்கிலத்தில் 'the'என்பது போல அரபியில் 'அல் மொழி ரீதியாகவும், காலப்போக்கிலும் 'அல் - இலாஹ்' என்று மருவி நின்றது.'இலாஹ்' எனும் சொல் வணக்கத்திற்குரியவன் என்றும்,'அல் - இலாஹ்' என்னும் சொல் 'வணக்கத்திற்குரிய அந்த ஒருவன்' என்றும் பொருள்படுகின்றது.[7]'இலாஹ்' என்பதற்கு வணக்கத்திற்குரிய இறைவன் என்பது போல வியப்புக்குரியவன்,மக்கள் புகலிடம் தேடப்படுவதற்கு தொடர்புகொண்டு அமைதி பெறுவதற்கு உரியவன், ஆர்வத்துடன் சென்றடையப்படத் தகுதி வாய்ந்தவன், மறைவானவன், மிக உயர்ந்தவன், இந்தத் தன்மைகள் எல்லாம் கொண்ட ஒருவன்தான் வணக்கத்திற்கு உரியவன் ஆவான்.[6]

சைவசித்தாந்தம் கடவுள் உண்டு என்று வேதங்கள் கூறுவதை முன்மொழிந்திருந்தாலும், கடவுள் உண்மையை ஆராய்ந்து தான் அறிய வேண்டும் என விரும்புகின்றவர்களுக்கு அனுமானப் பிரமாணம் கொண்டு, கடவுள் உண்மையை நிறுவி இருத்தல் காணலாம்.உலகம் அறிவற்ற சடப்பொருள் ஆகையினால் வருதல், போதல், நிற்றல் என்ற தொழில்களைத் தானே செய்யமாட்டாது. பஞ்சு தானே நூலாகவும், ஆடையாகவும் ஆவதில்லை; மண்ணும் தானே குடமாக உருவெடுக்காது; பஞ்சு, மண் முதலிய சடப்பொருட்கள் ஆடை, குடம் போன்றனவாக உருவெடுப்பதற்கு ஒரு சித்து அல்லது அறிவுப்பொருள் தேவைப்படுதல் போல, உலகம் தோன்றிநின்று அழிதலாகிய செயலுக்கும் அநாதி முதல் சித்துருவாயுள்ள பரம்பொருள் ஒருவன் கட்டாயம் இருத்தல் வேண்டும் என்று அறிவியல் பூர்வமாக மெய்கண்ட சாஸ்திர நூல்கள் சித்தாந்தம் செய்கின்றன. காணப்பட்ட உலகத்தைக் கொண்டு காணப்படாத கடவுட்கு உண்மை கூறுகின்றனர். ஒருவன், ஒருத்தி, ஒன்று எனக் காணப்படும் உலகிற்கு தோற்றம், நிலைபேறு, ஒடுக்கம் என்ற மூன்று நிலைகள் உண்டு. இம்மூன்று செயல்களுக்கும் ஒரு கர்த்தா (வினை முதல்) தேவை. அந்த கர்த்தாஒடுக்கும் தொழிலிற்கு உரியவனாகத்தான் இருக்க முடியும். யாரிடம் உலகம் ஒடுங்குகின்றதோ அவனிடமிருந்து தான் மீண்டும் மலர்தல் வேண்டும். இப்பேருண்மையை''அவன், அவள், அது எனும் அவை'' என்ற சிவஞானபோத முதற்சூத்திரமும், ''ஒருவனோ டொருத்தி ஒன்றென்றுரைத்திடும் உலகம் எல்லாம்'' என்ற சிவஞான சித்தியார் பாடலும் தெளிவுறுத்துகின்றன(சிவஞானசித்தியார்:21).

உலகத்தை ஒடுங்கச் செய்யும் சங்காரகாரகன் சிவன் என வேதங்கள் மொழிகின்றன. சிவம் என்ற சொல்லிற்கு பல பொருள்கள் உண்டு. சிவன் என்பதற்கு அன்புறுதல் என்ற பொருள் உண்டு, இது சிவ என்ற சொல்லின் அடியாக வந்தது. எனவே சிவம் என்பது எல்லா உயிர்களிடத்தும்

கொள்ளும் பேரன்பினையும் பெரும் கருணைத்திறத்தையும் குறிப்பது ஆகும்.

திருமூலர் இதனை,''அன்பும் சிவமும் இரண்டு என்பார் அறிவிலார்,

அன்பே சிவமாவது ஆரும் அறிகிலார்,
அன்பே சிவமாவது ஆரும் அறிந்தபின்,
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே''(திருமந்திரம்:437)
எனக்குறிப்பிட்டிருத்தல் காணலாம்.

செம்மை என்னும் சொல்லிலிருந்து பிறந்த சொல் சிவம் ஆகும். சிவந்த மேனியை உடையவன் சிவன். சிவ, சிவப்பு என்னும் வேர்ச்சொல்லின் அடியாகத் தோன்றிய சொல்தான் சிவன் எனவே சிவந்தமேனியன் என்ற கருத்துள்ளது. ஞானிகளது அறிவில் செக்கர் நிற வானம் போன்று சிவந்த மேனியனாகத் தோன்றுகின்றான்.எனவே தான் பொன்னார் மேனியனே என, சிவனைச் சிறப்பித்துப் பாடுகின்றனர். சிவன் எனும் நாமம் தனக்கே,உடைய செம்மேனி எம்மான் (iv:112:9) என்பது அப்பர் அருள் மொழியும்,செக்கர் போலும் திருமேனி (viii:27:8) என்னும் மாணிக்கவாசகர் வாய்மொழியும் உறுதிப்படுத்துகின்றன. மேலும் ''சிவம்'' என்ற சொல்லிற்கு நன்மை, முக்தி, மங்கலம், செம்மை, உயர்வு, களிப்பு எனப் பல பொருள்கள் உண்டு. எனவே நன்மையும், மங்கலமும் உடையவன் என்பதைச் சிவன் என்ற சொல்லால் குறித்தனர் என்பது பெறப்படும். மங்கலம், நன்மை என்ற பொருள்களையும் சிவன் என்ற சொல் உணர்த்தும். சம்பந்தர் நன்றுடையானைத் தீயதில்லானை என்றது (198,1) காண்க. அப்பர் பெருமான் ''நலம் மிகக் கொடுப்பது'' (iv:11:6) என்று நவின்றார். ஆங்கிலத்தில் Good என்ற சொல்லின் அடியாகத்தான் God என்ற சொல் தோன்றியது என்பர்.

இஸ்லாம்,'அல்லாஹ்' எந்த வகையான தீமை இல்லாதவன் எனவும், எல்லா வகையான நன்மை உடையவன் எனவும் குறிப்பிடுகின்றது. இதனைக் குர்ஆன், நீங்கள் அவனை அல்லாஹ் என்று கூறினாலும் சரி, கருணையாளன் என்று சொன்னாலும் சரி அனைத்து நல்ல பெயர்களும் அவனுக்கே உரியனவாகும்.(17:110)

ஸி என்னுந் தாது கிடத்தலெனப் பொருள்படுதலின் இறுதிக்காலத்தில் உலகமெல்லாம் தம்மிடத்து ஒடுங்கிக் கிடத்தல் எனவும், நல்ல மக்களின் மனங்கள் எல்லாம் தம்பால் கிடத்தல் எனவும், மெலிவித்தல் - கூருவித்தல் எனவும் பொருள்படுகின்றது. எனவே ஆன்மாக்களின் பாசசக்தியை மெலிவித்து சிற்சக்தியை கூருவித்தலால் காந்திப்பொருள் தரும் வஸி என்னும் சொல் வர்ணவியாபாரம் உறுதலால் சிவனெனப்படுவர்.[7]

சிவம் என்ற அந்தப் பொருளை வேதங்கள் ''இதுதான் உயிர்கட்கு உறைவிடம்: இது சிவம்'' (பிருகதாரணிய உபநிடதம் 17, 1,10),''சிவனார் பொன்வண்ணர்''(தைத்திரியம் 1,6.1),''சாந்தியினால் நிறைந்த சிவம்''(தை, 1,6.2),''எது முடிவிலா இன்பமோ அது சிவம்'' (சாந்தோக்கியம், 7, 25.1),''இது அபயமாகிய (எல்லாவுயிர்க்கும்) சிவம், இது பிரம்மம்'' என்று (சாந்தோக்கியம்) குறிப்பிடுகின்றன.[8]

இஸ்லாமிய இறைக்கொள்கை ஏக இறைவனை வழிபடுவது, அவனுக்காகவே வாழ்வது, இறுதியில் அவனைச் சென்றடைவது. கற்புடைய இல்லாள் தன் நாயகனை அன்றி பிற ஒரு ஆடவனையும் மனதினில் எண்ணாள் என்பது போன்றது. 'அல்லாஹ்' ஏகன் அவனது உண்மை ஏகத்துவமாய் இருப்பது போல அவனது இலக்கணங்கள் ஏகமாயும் சம்பூர்ணமாயும் இருக்கின்றன. அவன் எக்குறையும் அற்றிருப்பது போல, அவனது வருணனைகளும் குறையற்றுப் பரிபூரணமடைந்தும் இருக்கின்றன. இவ்வாறு உறுதிகொள்ள வேண்டியதே ஒவ்வொருமனிதனது இயற்கையாக அமைந்துள்ளன. (அல் குர் ஆன் 30.30)

வானத்திலும் பூமியிலும் 'அல்லாஹ்' ஒருவனைத்தவிர மற்றக் கடவுளர்களும் இருந்திருந்தால் அவ்விரண்டு ஒழுங்கமைப்பும் சீர்குலைந்து போயிருக்கும். எனவே அவர்களின் பொய்யான வர்ணனையில் இருந்து அரியணையின் அதிபதியான 'அல்லாஹ்' மிகப்புனிதமானவன். (21:22) மேலும், திருக்குர்ஆன், 'ஏக இறைவன்' (4.87),'அரசன்: உன்னத அந்தஸ்து உடையவன்: ஏக இறைவன்: (23:116)'ஏக இறைவன்: (4-5), ஆட்சியதிகாரம் அவனுக்கே உரியது: அவனைத்தவிர வேறு இறைவன் இல்லை (39:6), அவனைத்தவிர வேறு இறைவன் இல்லை: உங்களுடையவும் உங்கள் மூதாதையர்களுடையவும் இறைவன் (44:6-8),'கூறுவீராக : அவன் அல்லாஹ் ஏகன், அல்லாஹ், எவரிடத்தும் எத்தேவையுமில்லாதவன். அனைவரும் அவ்விடத்தில் தேவையுடைவர்கள் அவன் யாருடைய சந்ததியும் இல்லை அவனுக்கு யாரும் சந்ததி இல்லை மேலும் அவனுக்கு நிகரானவர் எவருமில்லை' (திருக்குர்ஆன்:சூரா:112) எனக் குறிப்பிடுகின்றது.

ஏகனை விடுத்து வேறு தெய்வங்களை ஏற்படுத்தி வணங்கி வருகின்றவர்கள், அந்தத் தெய்வங்கள் இவர்களுக்கு நன்மையையும் புகழையும் பெற்றுத்தரும் என்று எண்ணுகிறார்கள். ஏகனிடத்தே ஒருவனுக்கு கண்ணியத்தைப் பெற்றுத்தர சிபார்சு செய்ய எந்தத் தெய்வமும் இல்லவேயில்லை. மேலும், இவர்களால் தெய்வமாக்கப்பட்ட எவரும் தங்களை வணங்குமாறு நிச்சயமாகக் கூறிக்கொண்டதேயில்லை. மறுமை நாளில் இந்த தெய்வங்கள் ஏகனுக்கு முன்னால் தங்களது

இயலாமையால், கைவிட்டு பாதகமாக எதிர்ச்சாட்சி சொல்லி நிற்பார்கள் என்பது திருக்குர்ஆன் போதனை.

திருக்குர்ஆன் மீள மீள வலியுறுத்தும் ஏக இறைக்கொள்கையே சைவசித்தாந்தமுமாம். ஆறுமுகநாவலர் தனது சைவதூஷண பரிகாரத்திலே இத்தன்மையை எடுத்துக்காட்டுகின்றார். சைவர்கள் பல தெய்வவழிபாடு உடையவர்கள் என்ற கருத்துள்ளது. உண்மையில் சிவனையன்றி, விஷ்ணு முதலிய பிறரையும் வணங்குதல் என்பது பரம்பொருளாகிய பதிகள் எனக்கொண்டு வணங்குவதில்லை. பதியாகிய அச்சிவனது அடியார் எனக்கொண்டு வணங்குதல். சிவனானவர் தம்முடைய அடியார்களை வழிபடுபவர்களைத் தம்மையே வழிபடுபவர்கள் என்றும், தாம் அவ்வடியவர்களின் இடமாகக்கொண்டு நின்று அவ்வழிபாட்டை ஏற்று அனுக்கிரகம் செய்வார் என்றும் தம்முடைய அடியவர்களை நிந்திப்பவர் தம்மையே நிந்திப்பவர்கள் என்றும் தாம் அந்த நிந்தனையின் பொருட்டு அவர்களுக்குத் தண்டனை செய்வார் என்றும் வேதாகமங்கள் கூறுகின்றன.[9]

வேதத்துள், அத்துவிதம் என்றதுமன்றி, ஏகம் எனவும் ஒற்றுமைப்பட ஓதுதலால், அதற்கு மாறாக உயிர்கள் பல என்றும், இறைவன் அவற்றுடன் ஒன்றி நிற்கின்றார் என்றும், வேறுபடக் கூறுவதென்ன? என்னும் தடையினை நிகழ்த்திக்கொண்டு மெய்கண்டார் அதற்கு விடை கூறும் நிலையில்,

‘ஒன்றென்ற தொன்றே காண் ஒன்றே பதி பசுவாம்
ஓன்றென்ற நீ பாசத்தோடுளை காண் - ஒன்றே பதி
அக்கரங்கள் இன்றாம் அகரவுயிர் இன்றேல்
இக்கிரமத் தென்னும் இருக்கும்’

(சிவஞானபோதம்:2:1:2) எனவும்,

அருணந்தி சிவாசாரியார்,

‘ஒன்றென மறைகளெல்லாம் உரைத்திட உயிர்கள் ஒன்றி
நின்றனன் என்று பன்மை நிகழ்த்தென்னை யென்னி
அன்றவை பதிதான் ஒன்றென்றறையும் அக்கரங்கள் தோறும்
சென்றிடும் அகரம் போல நின்றனன் சிவனும் சேர்ந்தே’

(சிவஞானசித்தியார்:92) எனவும் குறிப்பிடுகின்றனர்.

வேதத்தில் ஒன்று எனக்குறிப்பிடப்படுவது இறைவன் ஒருவன் என்பதாகும். இதனை ஒருவனே உருத்திரன் இரண்டாம் முதற்கடவுள் இல்லை. விண்ணும் மண்ணும் தோற்றுவிக்கும் தேவன் ஒருவனே (ஸ்வேதாஸ்வதர உபநிடதம்), பிரமப்பொருள் ஒன்றே (பிருகதாரணிய உபநிடதம்) என சுருதிகள் விளக்குகின்றன. [10]பிரமம் இல்லையாயின் ஒரு பொருளும் இல்லை என்பது அக்கரங்கள் தோறும் சென்றிடும் அகரம் போல நின்றனன் சிவனும் சேர்ந்தே என்றார். திருவாசகம் ஏகன் (சிவபுராணம்) எனவும்,‘ஒருவன் என்னும் ஒருவன் காண்க’ எனவும், திருமந்திரம் ‘ஒன்றவன் தானே’எனவும்,சம்பந்தர் தேவாரம்‘ஓருருவாயினை’ எனவும், உமாபதிசிவம் ‘ஏகன்’ எனவும் குறித்தனர். இதன்வழி முஸ்லிம் மரபில் பயன்படுத்தப்படும் ஏகன் என்ற சொல் சித்தாந்த மரபிலும் ஆதிகாலந்தொட்டு இருப்பதைக் காணமுடிகின்றது.

திருக்குர்ஆன் மேலும் மூன்றில் மூன்றாமவன் (முக்கடவுட்களில் ஒருவன்) என்று கூறுகின்றவர்கள் திட்டமாக மாறு செய்தவர் ஆகின்றனர். ஆனால் ஒரு நாயகனைத் தவிர்த்து வேறுநாயகனிலன். அவர்கள் (இணைகற்பித்து) கூறுவதிலிருந்து விலகாதிருப்பார்களாயின் அவர்களில் நிராகரித்துக் கொண்டிருப்போருக்கு நோஷா அளிக்கும் வேதனை பிடித்துவிடும் (அல்குர் ஆன், 5:73) என்ற கருத்து, சித்தாந்தத்தில் கூறப்படும் மும்மூர்த்திக் கோட்பாட்டுடன் பொருந்திச் செல்கின்றது. சிவன் மும்மூர்த்திகளில் மேலானவனாக துரியமூர்த்தியாக இருந்தாலும், இணைகற்பிப்பவர்கள் சிவனை மும்மூர்த்திகளில் ஒருவன் எனப்பின்வருமாறு குறிப்பிடுவர். ‘நம்மவர் அவரே மூவர் என்றே எம்பிரானோடும், எண்ணி விண் ஆண்டு மண்மேல் தேவர் என்றே இறுமாந்து என்ன பாவந் திரிதவரே’ (திருவாசகம், திருச்சதகம் 4),‘தேவரில் ஒருவன் என்பர் திருவுருச் சிவனைத் தேவர் - மூவராய் நின்றதுஓரார்’ (சிவஞானசித்தியார் 69),‘படைத்து அளித்து அழிப்ப மும்மூர்த்திகளாயினை’ (திருஞான-1-129-அடி 4) ‘தேவர்கோ அறியாத தேவதேவன் செழும் பொழில்கள் பயந்து காத்து அழிக்குமற்றை-மூவர் கோனாய் நின்ற முதல்வன்’ (திருவாசகம்,திருச்சதகம் 30) ‘முந்திய முதல் நடு இறுதியும் ஆனாய் மூவரும் அறிகிலார்’ எனவும் (திருவாசகம், திருப்பள்ளியெழுச்சி) வருமிடங்களில் காணலாம்.

இறைவனுக்கு உரிய முக்கியமான குணம் உயிர்கள் மேல் வைத்திருக்கின்ற கருணையாகும் அல்லாஹ் அளவிலாத கருணையாளன்; இணையிலாக் கிருபையாளன் (2.16); அல்லாஹ் மகத்தான கருணை பொழிபவனாக இருக்கின்றான்; அளப்பரிய கருணையும், மிகுந்த பரிவும் கொண்டவனாக இருக்கின்றான் (2.143); அல்லாஹ் தன் அடிமைகள் மீது பெரிதும் பரிவுள்ளவனாக இருக்கின்றான்(2.205);அல்லாஹ் உலக மக்கள் மீது பேரருள் புரிபவனாக இருக்கின்றான் (2.251); அல்லாஹ் உங்கள் மீது அளப்பரிய கருணை புரிபவனாக இருக்கின்றான்; உங்களுடைய இறைவன் விசாலமான கருணையாளனாக இருக்கின்றான் (6.147);என்னுடைய இறைவன் பெருங்கருணை பொழிபவனும், உயிர்கள் பல

என்றும் பேரன்பாளனுமாவான் (11:90); அத்தகைய அன்பினாலும், கருணையினாலும் உயிரற்றவராய் இருந்த ஆன்மாவை உயிர் ஊட்டி,உலகத்தில் வாழும்படியும் பின்னர் மரிக்கச் செய்து, இறுதி மீட்புநாளில் மீட்பவனும் அவனே.

அவன் படைப்பின் சிறப்பை திருக்குர்ஆன் விரிவாக விளக்குகின்றது. அவன் உங்கள் மீது கனிவுடையவனாகவும், கிருபையுடையவனாகவும் இருக்கின்றான். வானம், பூமியின் அரசன் (6:3,12); வானத்தையும் பூமியையும் படைத்தவன், அவன் ஆகுக என்று ஆணையிடும் போது ஆகிவிடுகின்றது (2:116,117); அவனே உங்களை ஓர் ஆன்மாவிலிருந்து படைத்தான் (4:1); வானத்தையும் பூமியையும் ஆறு நாட்களில் படைத்தான்; ஒவ்வொரு பணியையும் நிர்வகிக்கின்றான்; ஒவ்வொரு பொருளையும் மிகவும் நல்ல முறையில் அமைத்தான்; உங்களுக்கு காதுகளையும் கண்களையும் இதயத்தையும் வழங்கினான்; நீங்கள் உயிரற்ற பொருள்களாக இருந்தீர்கள் அவனே உயிர்கொடுத்தான்; அவனே மரணமாக்குகின்றான்; அவனே வாழ்வு அளிக்கின்றான்; வானத்தையும் பூமியையும் படைத்தவன் மழைபொழியச் செய்தான்; கனிகளையும் தானியங்களையும் உற்பத்தி செய்தான்; உங்களுக்குத் தேவையான அனைத்தையும் தயார் செய்தான் (14:34);சூரியனுக்கு வெளிச்சத்தையும் சந்திரனுக்கு ஒளியையும் தந்தான்; இரவு - பகலை மாறி மாறி வரச் செய்தான்;இறந்த பூமியை உயிர்பெறச் செய்தான்;தானியங்களை முளைக்கச் செய்தான். தோட்டங்களை உருவாக்கினான். நதிகளை ஓடச்செய்தான்.

சைவசித்தாந்தம் இறைவனை ஏகன் என்று கூறினாலும், அவ் ஏகனுக்கு இரண்டு இயல்புகளைக் கூறுகின்றது. ஒன்று உண்மை இயல்பு, மற்றையது பொது இயல்பு, அநாதிமுத்த சித்துருவாகிய முதல்வன் ஒன்றினுந் தோய்வின்றித் தானே சுயம்பிரகாசமாய் நிற்கும் நிலையில் சிவம் என அழைக்கப்படுவான். இந்நிலையில் இறைவனுக்கு அருவம், உருவம், அருவுருவம் என்ற வடிவங்களோ குணம், குறி எதுவுமின்றி உள்ளது.உயிர்கள் உதவிசெய்யுந்தன்மையில் இதே சிவம் உலகெலாமாகி வேறாய் உடனாய் நிற்கும் நிலையில் சக்தி என அழைக்கப்படும். சக்தியோடு கூடி ஐந்தொழில் செய்யும் தன்மையில் முதல்வன் பதியெனப் பெயர்பெற்று நிற்பான். இவ்வாறு ஒரே பரம்பொருள் மூன்று நிலைகளின் சிவம், சக்தி பதியென்று மூன்று பெயர்கள் பெறுகிறது. தனக்கென ஒரு தொழிலுமின்றி நிற்கும் சிவம் உயிர்கள் மேல் வைத்த பெருங்கருணையினால் படைத்தல், காத்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்ற பஞ்சகிருத்தியங்களையும் தம் நலன்பொருட்டுச் செய்யாது, ஆன்மாக்களின் நலன்பொருட்டுச் செய்தருளுகின்றார். ஆண் பெண் அலி என்னும் மூன்று இல்லாத அநாதிமல முத்த பதியாகிய சிவமே சகல ஆன்மாக்களையும் தோற்றுவித்தலால்,ஆண்பாற்படுத்தும் பிதாவெனவும், சூரியனுக்கு கிரணம் போல அச்சிவத்துக்கு அபின்னமாயுள்ள சக்தியையே நிமித்தக்காரணனாகிய அச்சிவம் அத்தொழிலில் இயற்றுவதற்கு துணைக்காரணமாயிருத்தலால் பெண்பாற்படுத்த மாது எனவும், அச்சிவம் அச்சக்தியோடு கூடி தொழில்செய்ய நினைத்தலே அவ்வான்மாக்களது தோற்றத்திற்குக் காரணமாகிய தொழில் ஆகையினால் அதனை உகந்துபுணர்தல் எனவும், அத்தொழில் இல்லாமையையே பிரிதல் எனவும் சிவஞானசித்தியார் விளக்குகின்றது.(சிவஞானசித்தியார்:167)

படைத்தல் என்பது எதுவுமற்ற சூனியத்தில் இருந்து படைத்தல் என்பதல்ல, சித்து அல்லது அறிவுப் பொருளாகிய இறைவன் தானே படைக்கின்றான்; அதுவும் சித்துப்பொருளாகவே இருத்தல் வேண்டும்,எனவே தனது வைப்புச்சக்தியாகவும், சடசக்தியாகவும் உள்ள மாயை மூலம் தனது நினைப்பு மாத்திரையால் படைக்கின்றார். ஆன்மாக்களும் இறைவனைப் போல உள்பொருளாயினும், அநாதியாகவே ஆணவமலத்தைச் சார்ந்ததிருப்பதனாலும் அறிவு, தொழில் இச்சையின்றி இருக்கின்றது, இறைவன் அவற்றின் மீது கொண்ட கருணையினால்கண்தெரியாதவனுக்கு கோல்கொடுப்பது போல36 தத்துவங்களினாலான மாயையின் மூலம் தனு, கரண புவன போகங்களையும் அறிவு முதலானவற்றையும் வழங்குகின்றான்; அதன்வழி வரும் கர்மம் காரணமாக உயிர் நால்வகைத் தோற்றம் எழுவகைப்பிறப்பு எண்பத்துநான்கு நூறுஆயிரம் யோனிபேதம் உடையதாய் பிறந்திறந்து உழலும்.

ஆன்மாக்கள் இதன்வழி ஒரு பிறவியன்றி பல பிறவிகள் எடுக்கும். பிறவிதோறும் ஏற்படும் மலத்தேய்வின் காரணமாக இதுவரை நான் செய்தேன் என்று கருதிய ஆன்மா எல்லாமே இறைவன் அருள்வழி நடப்பது என்பதை உணரும். காணும் உபகாரமும், காட்டும் உபகாரமும் இறைவன் தான் என்பதை உணரும் போது இறைவன் அருள்வழிநடக்கத் தலைப்படும். ஆன்மாவின் பக்குவம் நோக்கி இறைவன் அதனது மலத்தை நீக்கி, தன் அருள்வியாபகத்துள் அடக்கிக்கொள்வான்.

திருவாசகத்தின் 656 பதிகங்களும் இறைவனது பெருமைகளை விளக்குகின்றன. உலகப்படைப்பின் சிறப்பை விளக்கும் போது "…..முழுவதும், படைப்போன் படைக்கும் பழையோன்; படைத்தவை, காப்போன் காக்குங் கடவுள் காப்பவை, கரப்போன் கரப்பவை கருதாக், கருத்துடைக் கடவுள்; நாள் தொறும், அருக்கனில் சோதி அமைத்தோன் திருத்தகு, மதியில் தண்மை வைத்தோன் திண்திறல், தீயின் வெம்மை செய்தோன் பொய்தீர், வானில் கலப்பு வைத்தோன் மேதகு, காலில் ஊக்கங் கண்டோன் நிகழ்திகழ், நீரில் இன்சுவை நிகழ்த்தோன் வெளிப்பட, மண்ணில் திண்மை வைத்தோன் என்று,

எனைப்பல கோடி எனைப் பலபிறவும்,அனைத்து அனைத்து அவ்வயின் அடைத்தோன்…”[11] எனக் குறிப்பிடுதல் திருக்குர்ஆனில் வரும் கருத்துக்களுடன் ஒப்பு நோக்கத்தக்கது.

சூரியனிடத்து ஒளியை வைத்தவனும், அழகிய சந்திரனிடத்துக் குளிர்ச்சியை வைத்தவனும், வலிமை பொருந்திய அக்கினியினிடத்து வெம்மையை வைத்தவனும்,நிலைபெற்றுள்ள ஆகாயத்தினிடத்து தம்முள் மாறுபடும் ஏனைய நான்கு பூதங்களும் தங்குமாறு செய்தவனும் சிறப்புப் பொருந்திய காற்றினிடத்து இயக்கத்தை வைத்தவனும் பூமியினிடத்துச் செறிவை வைத்தவனும் என்று கூறும் முறையில் ஒவ்வொரு பொருளும் ஒவ்வோர் இயல்பைப் பெற்று விளங்குமாறு செய்தவன் சிவனே ஆவான். மேலும் அவன் உலக அழிவின் பின்னரும் இருப்பதை ‘அந்தமும் ஆதியும் அகன்றோன் காண்க, கற்பமும் இறுதியும் கண்டோன் காண்க, தேவரும் அறியாச் சிவனே காண்க, பெண் ஆண் அலியென்னும் பெற்றியோன் காண்க, கருணையின் பெருமை கண்டோன் காண்க’[12] எனக்குறிப்பிட்டிருத்தல் காணலாம்.

இறைவன் படைத்தல் முதலிய ஐந்தொழில்களைச் செய்யும்போது பலவகையான வடிவங்கள் கொள்ளுகின்றான். அவ்வடிவங்கள் யாவும் இறைவனது அருள்வடிவங்கள் ஆகையினால், அவையும் வழிபடத்தக்கது என்பது சைவசித்தாந்தக் கருத்தாகும். இறைவன் போகியாகவும், யோகியாகவும், வேகியாகவும் இருந்து உயிர்களுக்கு அருள்செய்வதும், பிரமா, விஷ்ணு முதலிய தேவர்களை ஏவித்தொழில் செய்வதும், மனிதர்கள் எத்தெய்வத்தை வழிபட்டாலும், அந்தத்தெய்வங்கள் தோறும் நின்று அவர் தம் வழிபாட்டை ஏற்று, அவரவர் கருத்திற்கேற்ப அருள்செய்வதும், மற்றத்தெய்வங்கள் இறந்து, பிறந்து வரும்போது சிவன் ஒருவனே இறந்து, பிறவாது இருக்கின்றான் என விளக்கப்படுகின்றது. ஆயினும் இஸ்லாம் உருவவழிபாட்டையும், பல தெய்வ வழிபாட்டையும் மிகக்கடுமையாக மறுத்துள்ளது. சித்தாந்தம் உருவ வழிபாட்டை மறுக்கவில்லை ஆயினும் அதனை ஒரு முடிவான வழிபாடாகக் கூறவில்லை. உருவத்தை வழிபடும் ஒருவன் பின் படிமுறையில் உயர்ந்து அருவத்தையும், இறுதியில் அறிவால் வழிபடும் நிலைக்கும் தன்னை உயர்த்திக் கொள்ள வேண்டும்.

‘அல்லாஹ்’ ஒப்புவமை இல்லாதவனாகவும், எல்லாவற்றையும் அறிபவனாகவும், அழிவற்றவனாகவும், நுண்ணறிவுடையவனாகவும், தன்னைச் சார்ந்தவர்களுக்கு அருளுபவனாகவும், ஞானம் உடையவனாகவும், மன்னித்தருளும் பண்புடையவனாகவும், உலக மக்களின் பிரார்த்தனையை ஏற்பவனாகவும் இருக்கின்றான். ‘அல்லாஹ்’ இற்கு இன்னும் பல இயல்புகளைத் திருக்குர்ஆன் குறிப்பிடுகின்றது. சைவசித்தாந்தம் இறைவனுக்கு எல்லாமாக இருக்கின்ற சிறந்த குணங்கள் எல்லாவற்றையும், சத், சித், ஆனந்தம் என விளக்குகின்றது. சத் என்பது நிலைபேறு - என்றும் மாறாது ஒருப்படித்தாய் இருக்கும் பொருள் இந்த மெய்ப்பொருள் செம்பொருளாய் உள்ளது. தோற்றம், நிலை, இறுதி என்னும் வேறுபாடுகள் இன்றி நிற்றல். சித் என்பது அறிவு, எல்லாவற்றையும் எப்பொழுதும் தானே அறியும் பேரறிவு, ஆனந்தம் என்பது குறைவில்லாத பேரின்பத்தைக்குறிக்கும். இதுநிராதிசயானந்தம் எனப்படும். சத்தாயும், சித்தாயும், ஆனந்தமாயும் நிற்றலே இறைவனது உண்மை இயல்பாகின்றது.

ஆகமங்கள் இவற்றை இறைவனின் ஆறுகுணங்களாக விளக்குகின்றன. முற்றறிவு, இயற்கை உணர்வு, தன்வயம், குறைவிலாற்றல், முடிவிலாற்றலுடைமை, வரம்பிலின்பம் என்னும் ஆறு குணங்கள் நிறைந்த பொருள் சிவனே என்பதாம். தன்வயமுடைமை (சுதந்திரத்துவம்) - இறைவன் எல்லாவற்றையும் தானே செய்தல், முற்றிலும் உணர்தல்(சர்வஞ்ஞதை) - அனைத்தையும் எப்பொழுதும் தன் இச்சைவழி நடத்த ஒருங்குணர்தல், இயற்கை உணர்வு (அநாதிபோதம்) - இயற்கையாகவே பேரறிவு படைத்தவர், பேரருள் உடைமை (அலுப்த சக்தி) - இது குறைவில்லாத ஆற்றல் அல்லது அருள், முடிவிலாற்றலுடைமை (அனந்த சக்தி), வரம்பிலின்பம் (திருப்தி) - யாதொருகுறையுமில்லாதல்

சித்தாந்தம் எல்லா ஆன்மாக்களுமே ஒரு காலத்தில் முத்தி அடைவதற்குத் தகுதி உடையன என்பதால், அவற்றுக்கு இறைவன் வழங்கும் சுவர்க்க, நரக இன்ப துன்பங்கள் தற்காலிகமானவை என்றே குறிப்பிடுகின்றன. ஆன்மாக்கள் மீளாநரகத்தில் இருக்கும் என்ற கருத்து சித்தாந்த மரபிற்குப் புதியதாகும். ஆன்மாக்கள் தாம்தாம் செய்த பாவத்திற்கேற்ப இறை ஆணையினால் நரகத்தை அனுபவித்தாலும், அதனைநித்தியம் அனுபவிப்பதில்லை. தந்தைதாயர்கள் தங்கள் பிள்ளைகளைத் தண்டித்தல் அவர்கள் மேல்வைத்த அன்பினாலேயாம். அது போல பாவங்களைச் செய்த ஆன்மாக்களைத் தண்டித்தல் அவர்கள் மேல்வைத்த கிருபையினால் ஆகும். குற்றம் செய்தவனுக்கு கால எல்லை குறித்துத் தண்டிப்பது போல, கடவுளும் அவ்வான்மாக்களை அவரவர் செய்த பாவத்துக்குத் தக்கவாறு தண்டித்துப் பயமுறுத்தி முன்புசெய்த பாவங்களை அத்தண்டனையினால் ஒழித்து நரகத்திலிருந்து மீட்பார்.

மனிதர்களைப் பொறுத்தவரை இரண்டுசமயங்களும் மனிதப்பிறவியின் சிறப்பைப் போற்றுகின்றன, மனிதனுக்கு கிடைத்த பிறப்பு என்பது இறைவனை வழிபடுவதற்கும், அவனுக்குக் கீழ்படிவதற்கும் தான் என்பதை வலியுறுத்துகின்றன. இறை நிராகரிப்பாளர்கள், இணைவைப்பவர்கள் இறுதிநாளில் தண்டிக்கப்படுவார்கள் என்பதை இஸ்லாம் குறிப்பிடுகின்றது. சித்தாந்தம் மனிதரின் அறிவுத்திறத்திற்கேற்ப அவனது நம்பிக்கைகள் அமைவதனால், இறை நிராகரிப்பாளர்களுக்கு

கன்மத்துக்கு ஏற்பவும், தன்னைச் சார்ந்த உயிர்கள் வேண்டுபவற்றையும் இறைவன் அருள்வான். இதனால் அவன் விருப்புடையவன் என்பதல்ல, உயிர்களின் மலத்தை நீக்குவதே அவனது பெருங்கருணையாக உள்ளது. சலமிலன் சங்கரன் சார்ந்தவர்க்கலால், நலமிலன் நாடொறும் நல்குவான் நலம், குலமிலராயினும் குலத்துக்கேற்பதோர், நலமிகக் கொடுப்பது நமச்சிவாயவே (4-6-1) எனத் தேவாரமும் சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனாதல், சார்ந்தாரைக் காத்துஞ் சலமிலனாய் - சார்ந்தடியார், தாந்தானாச் செய்து பிறர் தங்கள் வினை தாங்கொடுத்தல், ஆய்தார்முற் செய்வினையும் ஆங்கு எனச் சிவஞானபோதமும் (சிவஞானபோதம், வெண்பா:6) குறிப்பிட்டிருத்தல் காணலாம். இதன் வழி இறைவன் தன்னைச் சார்நதவர்களைக் காப்பாற்றி அருளுதல் என்பது அவனது கருணைத்தன்மையாக இரண்டு சமயங்களிலும் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

**ஆய்வின் முடிவு**

இவ்வாய்வின் முடிவாக இஸ்லாம் சைவம் என்ற இரண்டு சமயங்களும் உருவாகிய இடத்தாலும், காலத்தாலும் வேறுபட்டு இருந்தாலும் ஒரு இறைவனைத் தான் வெவ்வேறு பெயர்களில் குறிப்பிட்டிருக்கின்றன. சிவன் என்ற சொல் நன்மை என்பதைக் குறிக்கும். திருக்குர்ஆன் இதனை 'அல்லாஹ்' எந்த வகையான தீமை இல்லாதவன் எனவும்,எல்லா வகையான நன்மை உடையவன் எனவும் குறிப்பிடுகின்றது. கருணை, அன்பு முதலிய நற்பண்புள்ள ஒரு இறைவனே இந்த உலகத்தைப் படைத்தான், காக்கின்றான் என்பதில் இவ்விரு சமயங்களும் உடன்படுகின்றன. இறைவனுக்கு இணைவைப்பதை இவை நிராகரிக்கின்றன.

உலகப்படைப்பு என்பது உயிர்களின் பொருட்டு என இவ்விரு சமயங்களும் உடன்பட்டாலும் இஸ்லாம் இறைவன் சூனியத்தில் இருந்து உலகத்தைப் படைத்தான் எனக்கூறுகின்றது. சைவசித்தாந்தம் மாயையிலிருந்து உலகத்தைப் படைத்தான் எனக்கூறுகின்றது.

இஸ்லாம் உருவவழிபாட்டை முற்றாக நிராகரிக்கின்றது. ஆனால் சைவசித்தாந்தம் இறைவனை உருவம் இல்லாது வழிபடுவதே பூரணத்துவமான வழிபாடு எனக் குறிப்பிட்டாலும் அது உயிர்களின் அறியாமை நீங்கி ஞான நிலை வரும்போதுதான் ஏற்படும் எனவும், பக்குவமில்லாத உயிர்கள் இறைவனை ஒரு உருவத்தில் வைத்து வழிபடலாம் என அனுமதிக்கின்றது. எனினும் இவ் உருவ வழிபாட்டில் பல்வேறு குறைபாடுகள் முஹம்மத் (ஸல்) காலத்தில் இருந்து இன்றளவும் இருந்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

திருக்குர்ஆன் குறிப்பிடும் இறைவன் அல்லது அல்லாஹ் பற்றிய விடயங்கள் விரிவாகத் தரப்படவில்லை. இறைவன் பற்றிய மிக ஆழமான ஆய்வும் தேவையற்றது என்பது திருக்குர்ஆனின் கருத்தாக உள்ளது. ஆனால் சைவசித்தாந்தம் இறைவன் பற்றிய ஆராய்ச்சியை மிக விரிவாக மேற்கொண்டுள்ளது. இறைவனுக்குரிய இலக்கணங்களை மிகத்தெளிவாக விளக்கியுள்ளது. இதன்வழி இறைவனை எக்காலத்திலும் மறக்காது அதாவது இடையறாது சிந்தித்து அவனை அடைதலே மனிதவாழ்வின் உயர்ந்த குறிக்கோளாகக் காட்டப்பட்டுள்ளது.

இஸ்லாமிய சமயமும் சைவசித்தாந்தமும் இலங்கையில் ஒரே பிரதேசங்களில் பின்பற்றப்படுவதனால் வழிபாட்டு மரபிலும் நம்பிக்கையிலும் இரண்டு சமயத்தவரிடையேயும் பல ஒற்றுமைகள் இருந்து வருகின்றன. யாழ்ப்பாணத்து ஆறுமுகநாவலரும் அவர் சார்ந்த மரபினரும் ஏக இறைக்கொள்கையை மிக அழுத்தமாக வலியுறுத்திக் கூறுவதற்கு, இஸ்லாமிய சமயநம்பிக்கைகள் காரணமாக இருந்திருக்க முடியும்.அதே நேரம் முஸ்லிம்களிடம் காணப்படும் சிலவகையான வழிபாட்டு மரபுகள் சைவர்களிடமிருந்து பெற்றவையாகவும் இருக்கலாம்.

**நிறைவுரை**

இஸ்லாம், திருக்குர்ஆன் இறைகட்டளையாக வருகின்ற வேதத்தை அடியாகக்கொண்டு மனிதனை நெறிப்படுத்துகின்றது. மனிதன் மரணத்தின் பின் அடையப்போகும் சுவர்க்க, நரகநிலைகளை எடுத்துக்காட்டி மனிதனை நெறிப்படுத்துகின்றது. ஏக இறைவனான அல்லாஹ்ஹின் மார்க்கத்தில் தீமைகளை விலக்கி நன்மைகளைச் செய்யுமாறு போதிக்கின்றது. உருவவழிபாடு, இறைவனுக்கு இணைவைத்தல், இறைநிராகரிப்பு என்பவற்றை மேற்கொள்ளுபவர்களுக்கு தீர்ப்புநாள் மகிழ்ச்சியைத்தராது எனக்குறிப்பிடப்பட்டுள்ளது. இஸ்லாமும் சைவசித்தாந்தமும் ஏகத்துவமான ஒரு இறைக்கோட்பாட்டை முன்வைத்தாலும், நடைமுறையில் இஸ்லாத்திலே கூடுதலான அழுத்தம் பெற்றுள்ளது. இறைவன் ஒப்பற்றவன், கருணைவடிவானவன், உலகத்தைப் படைத்தவன், பேரறிவாளன் என்ற கருத்தியலில் இரண்டுமதமும் உடன்படுகின்றன. இறைவன் எவ்வித ஆதரமும் இன்றி உலகத்தைப்படைத்தான், உயிர்களைப்படைத்தான், தீமைசெய்பவர்க்கு மீளாநரகத்தை வழங்குவான் போன்ற கருத்து நிலைகளில் மாறுபாடுள்ளன. இறைவனைத்தவிர இறை அருளாளர்கள், ஞானிகள், சித்தர்கள், பெரியோர்கள் போன்றோரை வழிபடுவதற்கும் இன்னும் எல்லா உயிர்களையும் வழிபடுவதற்கும் சித்தாந்தத்தில் அனுமதி உண்டு எனினும் சிவபெருமானுக்கு சமதையாக யாரையும் வழிபடக்கூடாது, இவர்களை வணங்கும் முறையில் வேறுபாடு உள்ளமை குறிப்பிடத்தக்கது.

**அடிக்குறிப்புக்கள்**

1) மஹதி, (2010) இதுதான் இஸ்லாம் (பாகம், 1,2), இஸ்லாமிய நிறுவனம் ட்ரஸ்ட், சென்னை, ப.,16.

2) அனஸ்.எம்.எஸ், தற்கால இஸ்லாமியச் சிந்தனை, குமரன் புத்தக இல்லம், கொழும்பு, 2007, ப.,269.
3) ஞானசம்பந்தன்.அ.ச., (2011) திருவாசகம் சில சிந்தனைகள், (1,2)கவிதா வெளியீடு, சென்னை, ப.,1143
4) http://www.shaivam.org/quo_navalar_saiva_samayam.htm
5) திருக்குர்ஆன், (தமிழ் மொழிபெயர்ப்பு) (1995) இஸ்லாமிய நிறுவனம் டரஸ்ட், சென்னை. ப.56
6) மேற்படி நூல். ப.67
7) ஆறுமுகநாவலர், பெரியபுராண சூசனம்,நூலகத்திட்டம், (நூலக எண், 1651) ப.2 www.noolaham.com
8) கிருஷ்ணராஜா.சோ., (பதிப்பாசிரியர்) காசிவாசி, சிவஞானபோதவசனலங்காரதீபம், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம், 2003, ப.109.
9) ஆறுமுகநாவலர், (1956) சைவதூஷண பரிகாரம், ஆறுமுகநாவலர் வித்தியாநுபாலன அச்சுயந்திர சாலை, பக்.1
10) மணி.சி.சு, சிவஞான மாபாடியம், திருநெல்வேலி, 2001, ப.278.
11) ஞானசம்பந்தன்.அ.ச., (2011) திருவாசகம் சில சிந்தனைகள், (1,2)கவிதா வெளியீடு, சென்னை, 157.
12) மேற்படி நூல், 158